**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூன் - 2019**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, June - 2019**

FWC

| தரம் :-13 (2019) | நாடகமும் அரங்கியலும் I | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

பகுதி I

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

01. "அரங்கில் பார்ப்போர் மேடையில் நடைபெறுவதற்கு ஏற்ப துலங்க வேண்டும்" எனக் கூறிய அரங்கவியலாளர்.
1) அரிஸ்ரோட்டில் 2) பரதர் 3) ஒகஸ்தாபோல்
4) ஸ்ரனிஸ்லவஸ்கி 5) பெற்றோல் பிறக்ட் ( )

02. கிரேக்க மகிழ்நெறி நாடக கட்டமைப்பில் உள்ளடங்காதது.
1) பாயிரம் 2) முரண் 3) வெளியேறுகை
4) இசைப்பாமுகாரி 5) பெருங்காட்சி ( )

03. கிரேக்கத்தில் ஹிப்போக்கிரட்டெஸ் (Hippokrites) என அழைக்கப்படுபவர்கள்.
1) கோமாளிகள் 2) நெறியாளர் 3) நடிகர்
4) இசை அமைப்பாளர் 5) பாடகர்கள் ( )

04. நாட்டிய சாஸ்திரம் கூறும் சாத்வீக அபிநயத்தில் 'பிரளய' என்பது.
1) வியர்த்தல் 2) மயிர்கூச் செறிதல் 3) மயக்கம்
4) கண்ணீர் சொரிதல் 5) குரல் மாற்றம் ( )

05. சமஸ்கிருத நாடகம் ஒன்றில் கதைப்பின்னலில் காணப்படாதது.
1) பதாக 2) கார்ய 3) பிந்து 4) பிரகரி 5) பாலாகம ( )

06. "கொமெடியாடெல் ஆர்த்தே" தோன்றிய நாடு.
1) இத்தாலி 2) கிறிஸ் 3) ஸ்பெயின்
4) பிரான்ஸ் 5) இங்கிலாந்து ( )

07. சமஸ்கிருத நாடகத்தின் கதாநாயகன்.
1) இலட்சியங்களை ஈட்டிக் கொள்பவனாக இருப்பான்.
2) நாடக இறுதியில் இறப்பான்.
3) தோழியை மணம் புரிவான்.
4) ஆளுமையற்றவனாக இருப்பான்.
5) விகடத்தைமுள்ளவனாவான் ( )

08. ஜப்பானிய அரங்கில் பாவைகளை பயன்படுத்தும் அரங்கு.
1) நோ 2) கபூக்கி 3) புன்ரக்கு 4) கியோஜின் 5) கொவாகா ( )

09. சற்றயர் (Satire) எனும் நாடக வகையை தமிழில் குறிப்பதற்கு முற்றிலும் பொருத்தமான சொல்.
1) நகைச்சுவை 2) அங்கதச் சுவை 3) பிரகசனம்
4) அவலசுவை 5) விகடச்சுவை ( )

agaram.lk

10. “மேயர் கோல்ட்” இன் நடிப்புக் கோட்பாடாக அறியப்படுவது,
1) முறைமைக் கோட்பாடு 2) விவாத அரங்க முறைமை
3) தொலைப்படுத்தல் கோட்பாடு 4) பிரயோக அரங்க முறைமை
5) உயிர்பொறி முறையியல் ( )

11. விவாகம், நோய் தீர்த்தல், சுகப்பிரசவம் வேண்டி நிகழ்த்தப்படும் சடங்குகள்.
1) தைநீராடல், குளிர்த்தி, ரட்டயக்கும 2) ரட்டயக்கும, மானாம்பூ, சன்னியக்கும
3) குளிர்த்தி, வாடாவள்ளி, தைநீராடல் 4) களவேள்வி, ரட்டயக்கும, குளிர்த்தி
5) ரட்டயக்கும, மானாம்பூ, குளிர்த்தி ( )

12. சங்ககால அகம் சார்ந்த சடங்குகள்.
1) களவேள்வி, தைநீராடல் 2) வாடாவெள்ளி, களவேள்வி 3) வாடாவெள்ளி, தைநீராடல்
4) தைநீராடல், சூரன்போர் 5) வேலன் வெறியாட்டு, வள்ளி திருமணம் ( )

13. ‘சிங்கள மக்களின் “சன்னியக்கும” சடங்கு நடைபெறுவது,
1) அனுராதபுரத்தில் 2) ருஹுனு பிரதேசத்தில் 3) மாத்தளையில்
4) குருநாகல் பிரதேசத்தில் 5) பொலநறுவைப் பிரதேசத்தில் ( )

14. குளிர்த்தி சடங்கு நடைபெறும் மாதம் பெரும்பாலும்.
1) மாசி மாதம் 2) பங்குனி மாதம் 3) சித்திரை மாதம்
4) வைகாசி மாதம் 5) ஐப்பசி மாதம் ( )

15. ‘சொக்கரி’ நாடகத்தில் பாத்திரங்களை அறிமுகம் செய்பவர்.
1) விகடகவி 2) குருநான்சே 3) கட்டியகாரன்
4) பெத்தேகுரு 5) காரியகரவணராள ( )

16. நிலப்பிரவுத்துவ காலத்தில் நாடகம் சார்ந்து தோன்றிய நூல்.
1) கலித்தொகை 2) மதங்க சூளாமணி 3) கவிதையியல்
4) பகவத்தாச்சியம் 5) சிலப்பதிகாரம் ( )

17. சிலப்பதிகார அரங்கில் சாலினி தெய்வத்தை சாந்திப்படுத்த செய்யப்படும் சடங்கு.
1) ஆச்சியர் குரவை 2) குன்றக்குரவை 3) வேட்டுவவரி
4) வேனிற்காதை 5) கடலாடு காதை ( )

agaram.lk

18. தமது சமகால அரங்க உருவாக்கத்திற்காக ராம்லீலா சடங்கு ஆற்றுகையில் உள்ள அரங்கிற்கான மூலவளங்களைப் பெற்றுக் கொண்டவர்.
1) பீற்றர் புறாக் 2) குறட்டவஸ்கி 3) மேயர் கோல்ட்
4) அன்ரனி ஆர்த்தோ 5) றிச்சாட் செக்னர் ( )

19. ‘தர்மி’ பற்றிய பின்வரும் கூற்றுக்களில் லோகதர்மிக்கு பொருந்தாத கூற்று,
A. பாத்திரங்கள் இயல்பாக நடித்தல்.
B. லலித அங்க அசைவுகள்.
C. முத்திரைகள் சைகைகள்.
D. வாழ்வை ஒத்த செயல்கள்.
E. போலித் தன்மை அற்ற விடயங்கள்.
1) ABE 2) ADE 3) ACE 4) ACD 5) ACE ( )

20. ‘வெறு வெளி’ (Empty space) என்னும் எண்ணக்கருவை அரங்கில் அறிமுகப்படுத்திய மேலைத்தேய அரங்கவியாலாளர்.
1) ஏகஸ்தோ போல் 2) ஆட்டாவூட் 3) றிச்சாட் செக்னா
4) பீற்றர் புறுக் 5) மேயர் கோல் ( )

21. சேக்ஸ்பியர் நாடகத்தில் வரும் முட்டாள் பாத்திரத்தின் பண்பின் போக்கு.
1) சிரிப்புக்கிடமானவற்றைப் பேசும் 2) தேவையற்றவற்றைப் பேசும்
3) விசர்த்தனமானவற்றைப் பேசும் 4) மடைத்தனமானவற்றைப் பேசும்
5) புத்தி பூர்வமானவற்றைப் பேசும் ( )

22. மத்தியகாலத்தைச் சேர்ந்த “ஒவ்வொரு மனிதரும்” (Every man) நாடகம் எத்தகையது.
1) திருமறை 2) அற்புதம் 3) ஒழுக்கப்பண்பு
4) பொதுவணக்கமுறை 5) வீரம் ( )

23. “தானயம்பல” எனுமிடத்தில் வேடமும் அணியப்பட்டு செய்யப்படும் சிங்கள நாட்டார் நாடகம்.
1) தொவில் 2) மகாபிரித் 3) சொக்கரி 4) ரட்டயகும 5) கோலம் ( )

24. “சமூக மாற்றத்திற்கான அரங்கு” எனும் நூலினை எழுதியவர்.
1) ம.சண்முகலிங்கம் 2) செ.சுந்தரம்பிள்ளை 3) நா.சுந்தரலிங்கம்
4) சி.மௌனகுரு 5) க.சிதம்பரநாதன் ( )

25. “இந்தோனேசிய வயங்குலிற்” (Wayan Kulit) எனும் நாடக வகை நிகழ்த்தப்படும் முறைமை.
1) பொம்மைகளைப் பயன்படுத்தி செய்யப்படுவதாகும்.
2) நிழல் பொம்மைகளைப் பயன்படுத்தி செய்யப்படுவதாகும்.
3) ஊமங்களைப் பயன்படுத்தி செய்யப்படுவதாகும்.
4) வேட முகங்களை பயன்படுத்தி செய்யப்படுவதாகும்.
5) நடிகர்களை பயன்படுத்தி செய்யப்படுவதாகும். ( )

26. முற்றிலும் மகாகவி உருத்திரமூர்த்தியின் “பா” நாடக பாடங்களின் பெயர்களைக் கொண்ட தொகுதி.
1) கோடை, தரிசனம், புதியதொரு வீடு 2) கோடை, வெறியாட்டு, புதியதொரு வீடு
3) கண்மணியாள் கதை, முற்றிற்று, தரிசனம் 4) கோடை, முற்றிற்று, புதியதொரு வீடு
5) கோலம், கண்மணியாள் கதை, கந்தன் கருணை ( )

27. பாரதர் கூறும் பிரதான கதைப்பின்னல் ஐந்தும் முறையே
1) ஆரம்பம், முயற்சி, பலாகம, பிராப்தியாய, நியதாப்தி
2) ஆரம்பம், முயற்சி, பிராப்தியாய, நியதாப்தி, பலாகம
3) ஆரம்பம், முயற்சி, நியதாப்தி, பலாகம, பிராப்தியாய
4) ஆரம்பம், முயற்சி, பலாகம, நியதாப்தி, பிராப்தியாய
5) ஆரம்பம், முயற்சி, பிராப்தியாய, பலாகம, நியதாப்தி ( )

agaram.lk

28. பெண் பாத்திரங்களைப் பெண்களே தாங்கி நடிக்கும் புராதன செந்நெறி மரபு.
1) கிரேக்க நாடகமரபு 2) சமஸ்கிருத நாடகமரபு 3) எலிசபெத் கால நாடக மரபு
4) யப்பானிய நாடகமரபு 5) மத்திய கால நாடகமரபு ( )

29. பிரயோக அரங்கு என்பது அரங்கில்
1) கேளிகைக்கு பயன்படுத்தப்படுவது. 2) பொழுது போக்கிற்காக பயன்படுத்தப்படுவது
3) சிகிச்சை முறையாக பயன்படுத்துவது. 4) இசை விளக்கத்திற்கு பயன்படுத்துவது
5) நடனத்திற்குப் பதிலாகப் பயன்படுத்துவது. ( )

30. அமெரிக்காவில் நவீன நாடக வரலாற்றை தொடக்கி வைத்தவர் எனும்பெயரைப் பெறுபவர்.
1) யூயின் ஓதில் 2) ஆகர் மிரிலர் 3) ரெனிசி வில்லியம்ஸ்
4) இயனஸ்கோ 5) ஸ்ரைன் பேர்க் ( )

31. சிங்கள நாட்டார் நாடகம் எனும் நூலின் ஆசிரியர்.
1) நீயூமான் ஜீபால் 2) இ.எவ்.சீ. லுடோவை 3) ஜோன்.டி.சில்வா
4) எதிர்வீரசரத்சந்திரா 5) சார்ள்ஸ்டயஸ் ( )

32. மலையகப் பொன்னர் சங்கர் நாடகத்தில் கதையை நகர்த்திச் செல்லும் பாத்திரம்.
1) தாமரை பெரிய நாச்சி 2) பொன்னர் 3) குதிரைச் சேவகன்
4) மந்திர மாமுனி 5) பெரியசாமி ( )

33. ஒரு நாடகம் நடைபெறும் பொழுது அந்நாடகம் பார்வையாளருக்குத் தெரிந்தும் அதேநேரம் நடிக்கும் பாத்திரத்திற்குத் தெரியாமலும் இருக்கும் கதையம்சம்.
1) மோதுகை 2) கண்டறிகை 3) தெரியாத நிலை
4) நாடகமுரண் 5) முறுக்கவிழ் முடிவமைதி ( )

34. மரத்திலான பொம்மைகளைக் கொண்டு செய்யப்படும் கத்தோலிக்க சமயச் சடங்கு வடிவம்.
1) கோலம் 2) உடக்குப் பாஸ் 3) திருப்பாடுகளின் காட்சி
4) சூரன்போர் 5) யமசங்காரம் ( )


35. நாடகம் ஒன்றின் குரல், பாடல், சொல்லாடல் மூலம் கருத்தைப் புலப்படுத்தவது.
1) ஆங்கீகம் 2) சாத்வீகம் 3) வாச்சீகம்
4) ஆஹார்யம் 5) ஸ்தாயிபாவம் ( )

❖ **36 – 40 வரையான வினாக்களிற்கு கீழ்வரும் படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.**


அ


ஆ


இ


ஈ


உ

36. 'அருமை நண்பன்' நாடகத்தின் மூலம் அறிமுகமான ஈழத்து நாடவவியலாளர்.
1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

37. யாழ்ப்பாணத்துப் பேச்சு மொழியை நாடகத்தில் முதலில் கையாண்டவர்.
1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

38. 'அரங்கியல்' எனும் நூலின் ஆசிரியர்.
1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

agaram.lk

39. ஈழத்திலே கூத்தினை புத்தாக்க முறையில் மீட்டெடுத்தவர்.
1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

40. இசை நாடக வரலாறு எனும் நூலை எழுதியவர்?
1) அ 2) ஆ 3) இ 4) ஈ 5) உ ( )

(1 x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து, நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி A

01.

1) 'ஆற்றுகைக் கலைகள்' எனும் சொற்றொடர் மூலம் கருதப்படுவது யாது? (3 புள்ளிகள்)

2) மேலைத்தேய கலைகோட்பாடு இரண்டையும் கீழைத்தேய கலைக்கோட்பாடு இரண்டையும் முன்வைத்து விளக்குக. (5 புள்ளிகள்)

3) நீர் பங்குபற்றிய ஆற்றுகை ஒன்றில் ஆற்றுவோர் பார்ப்போர் ஊடாட்டம் பற்றி சுருக்கமாக விளக்குக. (7 புள்ளிகள்)

02. காலத்திற்கு காலம் தோற்றம் பெறும் நடிப்புக் கோட்பாடுகளில் பின்வருவோர் முன்வைத்த கோட்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்குக.

1) ஸ்ரனிஸ்லவஸ்கி (5 புள்ளிகள்)
2) பெத்தோல் பிறக்ட் (5 புள்ளிகள்)
3) மேயர் கோல்ட் (5 புள்ளிகள்)

03. அரங்கவெளி ஆற்றுகையின் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைகின்றது பின்வரும் அரங்க வெளி பயன்படும் விதத்தினை விளக்குக.

கிரேக்கம் (5 புள்ளிகள்)
யப்பானிய கபுக்கி (5 புள்ளிகள்)
குளோப் அரங்கு (5 புள்ளிகள்)

## பிரிவு B

04. ஈழத்து தமிழ் அரங்க வளர்ச்சியின் பின்வரும் அரங்க நிறுவனங்களின் பங்களிப்புக்களை விளக்குக.

1) நடிகர் ஒன்றியம் (5 புள்ளிகள்)
2) நாடக அரங்கக் கல்லூரி (5 புள்ளிகள்)
3) திருமறைக் கலாமன்றம் (5 புள்ளிகள்)

agaram.lk

05. 1) நிருத்த, நிருத்திய, நாட்டிய என்பவற்றை விளக்கி அவற்றின் வேறுபாடுகளையும் விளக்குக. (9 புள்ளிகள்)

2) இந்திய அரங்க மரபில் பேசப்படும் தர்மிகனின் பிரிவுகளை விளக்குக. (6 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1) கதாசிஸ்
2) ஹணாமிச்சி
3) தெருவெளி அரங்கு
4) சிகிச்சை அரங்கு
5) சிறுவர் அரங்கு

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூன் - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, June - 2019

FWC

| தரம் :-13 (2019) | நாடகமும் அரங்கியலும் II | மூன்று மணித்தியாலம் 10 நிமிடம் |
|---|---|---|

பகுதி I

❖ இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.

01. கிரேக்க அரங்கில் "பரடோஸ்" குறிக்கும் பகுதி.
1) ஆடுகளத்தின் முன் பகுதி
2) பார்ப்போர் அமரும் பகுதி
3) பலிப் பீடத்தினை அண்டிய பகுதி
4) ஆடுகளத்தின் வெளிப்பகுதி
5) பார்ப்போர் கூடத்தின் இரு அந்தங்களுக்கிடையிலான நிலப்பகுதி. ( )

02. "இராவணேசன் நாடகத்தில் "உந்தன் உதிரமையா உனக்கிது உதவாமல் போய்விடுமா" என்ற பாடலுக்குரிய பாத்திரம்.
1) கும்பகர்ணன் 2) இந்திரஜித் 3) இலக்குவன்
4) சுக்கிரிவன் 5) அனுமான் ( )

03. பாரம்பரியக் கூத்தின் கட்டியக்காரன் பணிகளாக அமையாதது?
1) சபையோரை ஆயத்தம் செய்தல் 2) பாத்திர அறிமுகம் செய்தல்.
3) எடுத்துச் சொல்லியாக செயற்படல் 4) நகைச்சுவையை உண்டாக்கல்
5) கதைச் சுருக்கத்தை எடுத்துக் கூறல். ( )

04. அபிஞ்ஞான சாகுந்தலம் நாடகத்தில் வரும் பெண் பாத்திரங்களை கொண்ட தொகுதியாகக் காணப்படுவது
1) சகுந்தலை, அதிதி, பிரியம்வதை, நடி
2) சகுந்தலை, கஞ்சுகி, மாதலி, அகசூயை
3) பிரியம்வதை, அனசூயை, கஞ்சுகி, சகுந்தலை
4) கௌதமி, சானுமதி, மாதலி, சகுந்தலை.
5) நடி, அதிதி, சகுந்தலை, மாதலி ( )

05. எலிசபெத் கால அரங்கு அளிக்கைகளில் "வெற்றுக் கவிதை" என்ற நுட்பத்தை பின்பற்றியவர்கள்?
1) ஷேக்ஸ்பியர் - பென்ஜோன்சன்
2) தோமஸ் கிட் - றொபேட் கிறீம்.
3) ஷேக்ஸ்பியர் - கிறிஸ்டோபர் மாலோ
4) பென் ஜோன்சன் - கிறிஸ்டோபர் மாலோ
5) றொபேட் கிறீம் - பென்ஜோன்சன் ( )

06. ஆய்ச்சியர் குரவை சடங்காட் நிகழ்த்துகையில் வரும் பாத்திரங்கள்.
1) விறலி, பாணர், மாதரி 2) கண்ணகி, ஐயை, பாடினி
3) மாதலி, மாதிரி, ஐயை 4) குரவைப் பெண்கள், ஐயை, மாதிரி
5) விறலி, ஐயை, கண்ணகி ( )

07. பின்வருவனவற்றுள் 'குருநான்சே' யினால் நிகழ்த்தப்படும் சிங்களச் சடங்கு.
1) தொவில் 2) ஹம்மடுவ 3) ரட்டயக்கும
4) சன்னியக்கும 5) கொஹெம்ப ஹங்காரிய ( )

agaram.lk

08. கற்பனைப் பாத்திரங்கள் செயற்கையான தமிழில் பேசி உலவிய மேடையில் நியப் பாத்திரங்களான சீனிக்குட்டி உடையார், பிறக்கிறாசி போன்ற பாத்திரங்களை மேடையில் கொண்டு வந்தவர்.
1) சண்முகலிங்கம் 2) வித்தியானந்தன் 3) சொர்ணலிங்கம்.
4) கணபதிப் பிள்ளை 5) பாலேந்திரா ( )

09. நாடகத் தயாரிப்புச் செயற்பாட்டில் நெறியாளரின் பணி அல்லாதது,
1) எழுத்துருவை பகுப்பாய்வு செய்தல் 2) நடிபாகமளித்தல்.
3) ஒத்திகை மேற்கொள்ளல் 4) வியாக்கியானம் செய்தல்.
5) நடிகர்களை ஒழுங்குபடுத்தல். ( )

10. ஐரோப்பிய அரங்க வரலாற்றில் மத்திய கால நாடகங்கள் நிகழ்த்தப்பட்ட ஒழுங்கு.
1) பீடம், தேவாலய வாயில், ஊர்தி, பூத் அரங்கு
2) பூத் அரங்கு, தேவாலயவாயில், பீடம், ஊர்தி
3) ஊர்தி, திருச்சபை, பட்டணச் சதுக்க அரங்கு, பீடம்.
4) பீடம், ஊர்தி, தெருவெளி, தேவாயல வாயில்
5) திருச்சபை, பீடம், ஊர்தி, தெருவளி ( )

11. "நான் இந்த விருட்சங்கள் மீது எனது சகோதரர்கள் போன்று அன்பைச் செலுத்துகிறேன்" இக்கூற்றுக்குரிய பாத்திரம்.
1) அன்ரிகனி 2) நோறா 3) சகுந்தலை
4) டெஸ்ரிமோனோ 5) அலங்காரரூபி ( )

12. பல்லவர் காலத்தில் எழுதப்பெற்ற அங்கதச் சுவையுள்ள நாடகம்.
1) இராஜராஜேஸ்வர நாடகம் 2) பூம்புலியர் நாடகம்.
3) மத்தவிலாசப் பிரகசனம் 4) ஆரியக் கூத்து
5) சாக்கைக் கூத்து ( )

13. சிலப்பதிகார கால அரங்கில் பயன்படுத்தப்பட்ட கரந்துவரல் எழினி என்பது.
1) மேலிருந்து கீழ்வரும் திரை 2) இரண்டு பக்கத்தில் இருந்து வரும் திரை
3) ஒரு பக்கத்தில் இருந்து வரும் திரை 4) இது ஒரு ஒளிவிதானிப்பாகும்.
5) காட்சித் தட்டிகளாகும். ( )

14. "சைக்ளோ – ராமா" பற்றி தவறான கூற்று.
1) வான் திரையாகும் 2) மேடையின் இருபுறமும் காணப்படும்
3) பெருங்காட்சி அமைக்க உதவும் 4) கலைஞர் மறைந்திருக்க உதவும்
5) காட்சிக் சூழலைமாற்றியமைக்க உதவும் ( )

15. 1970 களில் தமிழ் அரங்கில் நாடக அறிக்கைகளைக் காத்திரமாக மேற்கொண்டவர்கள்.
1) அ.தாசீசியஸ், நா.சுந்தரலிங்கம், சுஹைர் ஹமித்
2) நா. சுந்தரலிங்கம், இ.முருகையன், அ.தாசீசியஸ்
3) அ.தாசீசியஸ், மஹாகவி, அம்பி
4) இ.சிவானந்தன், நா.சுந்தரலிங்கம், மஹாகவி.
5) சுஹைர் ஹமித், சிவானந்தன், அ. தாசீசியஸ் ( )

16. இயற்பண்புவாத நாடகத்தின் முதல் நாடக ஆசிரியராக கருதப் பெறுபவர்.
1) அன்ரூ அன்ரொயின் 2) டேவிட் பொஸ்கோ 3) எமிலிசோலா
4) அயனெஸ்கோ 5) இயூஜின் ( )

17. வாயு விளக்குகள் முதலில் பயன்படுத்தப்பட்ட அரங்கு.
1) கிரேக்க அரங்கு 2) லண்டன் அரங்கு 3) இத்தாலி அரங்கு
4) ஜேர்மன் அரங்கு 5) மத்தியகால அரங்கு ( )

18. நாடகம் ஒன்றில் குரல், பாடல், சொல்லாடல் மூலம் கருத்தை புலப்படுத்துவது.
1) ஆங்கீக அபிநயம் 2) சாத்வீக அபிநயம் 3) வாச்சீக அபிநயம்
4) ஆஹார்ய அபிநயம் 5) ஸ்தாயிராவ அபிநயம் ( )

agaram.lk

19. கிரேக்க அரங்கில் "எக்கிகுளோமா" எனும் பொறி பயன்படுத்தப்படும் நோக்கம்.
1) ஒளியின் வர்ணங்களை மாற்றியமைக்க.
2) இறந்தவர்களின் உடலைக் காட்டுவதற்கு
3) உயரமாக நின்று உரையாடுவதற்கு
4) கோறசினரின் வருகைக்காக
5) செய்தியாளரின் வருகைக்காக ( )

20. கபுக்கி நாடக மரபில் வரும் "மியே" (ஆயை) எனும் செயல் நிகழ்வு.
1) ஆட்ட இடை நிகழ்வு
2) விசேட்ட ஆட்ட நிகழ்வு
3) பிரதான நடிகரின் வரவு
4) துணைநடிகர் வரவு
5) பீற்றர் புறுக் ( )

21. பாதி மனிதப் பண்பும், பாதி மிருகப் பண்பும் இணைந்த வடிவம்.
1) சற்றயர்
2) அவலச்சுவை
3) மகிழ்நெறி
4) வீர நாடகம்
5) விகட நாடகம் ( )

22. பொம்மலாட்டத்தின் மூலம் கதைகூறும் யப்பானிய நாடக வடிவம்.
1) கொவாகோ
2) கியோயென்
3) நோஹ்
4) கபுக்கி
5) புன்றகு ( )

23. ஒரு நாடகத்தின் விருப்பதற்குரிய சர்வாதிகாரி எனப்படுபவர்.
1) தயாரிப்பாளர்
2) நாடக ஆசிரியர்
3) நடிகர்
4) நெறியாளர்
5) மேடை முகாமையாளர் ( )

24. மேடை முகாமையாளரின் பண்புகளில் ஒன்று.
1) காட்சிகளை ஒழுங்குபடுத்தல்
2) இசை அமைப்பு
3) ஒலி, ஒளி அவதானிப்பு
4) ஒப்பனை செய்தல்
5) வேட உடை விதானிப்பு ( )

25. அதிகளவிலான காதல் சுவையினைக் கொண்டிருக்கும் வடிவம்.
1) வடமோடி
2) வடபாங்கு
3) தென்மோடி
4) தென்பாங்கு
5) வாசாப்பு ( )

26. கனாமிச்சி என்றால் என்ன.
1) நோ அரங்கின் பாலப்பாதை
2) கபுக்கி அரங்கின் பாலப்பாதை
3) கபுக்கி அரங்கில் பெண் வேடம் ஏற்பவர்கள்.
4) நோ அரங்கில் பெண் வேடம் ஏற்பவர்கள்.
5) கபுக்கி அரங்கில் செய்யப்படும் ஒரு வகை ஒப்பனை. ( )

aigaram.lk

27. சமஸ்கிருத அரங்கப்பகுதிகளில் ஒன்றாக "நேபத்ய கிருகம்" குறிப்பது,
1) பிரதான மேடையாகும்
2) பார்ப்போர் கூடத்தையாகும்.
3) ஒப்பனை அறையாகும்
4) பிரதான வாயிலாகும்.
5) திரையையாகும். ( )

28. ஒளி விதானிப்பின் போது குறிப்பாகப் பாத்திரத்தைச் சுட்டும் ஒளி விளக்கு.
1) பொட்டொளி
2) கீற்றொளி
3) விரிகைச் சக்கரம்
4) பெருக்கொளி
5) மங்கலாக்கி ( )

29. இளவேனிற் காலத்தில் நிகழ்த்தப்படும் மலையகக்கூத்து.
1) காமன் கூத்து
2) பொன்னர் சங்கர்
3) அருச்சுணன் தபசு
4) கோவலன் கூத்து
5) மகிடிக் கூத்து ( )

30. "கலித்தொகை" எழுத்தப்பட்ட காலத்தில் ஆற்றுகை மையமாக இருந்திருக்க வேண்டுமென்று கருதப்படுகின்ற இடம்.
1) கூத்தாட்டவைக் குழாம்
2) பண்ணை
3) கூத்தம்பலம்
4) எருமன்று
5) களரி ( )

31. நாட்டார் ஒன்றிற்கு காட்சி விதானிப்புச் செய்ய வேண்டுவதற்கான காரணிகளில் ஒன்றாக அமையாதது.
1) நாடகத்தின் கதையமைப்பைத் தெரியப்படுத்துதல்.
2) நாடகத்தில் வரும் பாத்திரங்களின் இயல்புகளைக் காட்டுதல்.
3) நாடகத்தில் வரும் பாத்திரங்களின் அசைவியக்கத்திற்கு உதவுதல்.
4) நாடகத்தின் வகை மோடி என்பவற்றை தெரியப்படுத்தல்.
5) நாடகத்தை பகட்டு ஆடம்பரமானதாகக் காட்டுதல். ( )

32. வேடமுகம் என்பது,
   1) நடிகரின் முகத்தை மறைப்பதற்குப் பயன்படும்.
   2) சிரிப்பூட்டுவதற்குப் பயன்படும்.
   3) ஆடை அணிகளுக்கு ஏற்றதாகப் பயன்படும்.
   4) பாத்திரத்தின் இயல்பைக் காட்டுதவதாகப் பயன்படும்.
   5) விகாரத் தன்மையுடையதாகப் பயன்படும். ( )

33. நாடகம் ஒன்றில் இசையின் பயன்பாடு எனக் கருதப்பட முடியாதது.
   1) அது நாடகத்தின் பின்னனியைக் காட்டும்.
   2) அது நாடகத்தின் உணர்வு நிலையைக் காட்டும்.
   3) அது நாடகத்தின் சூழல் அமைவினைக் காட்டும்.
   4) அது நாடகத்தின் காலம், நேரம் என்பவற்றைக் காட்டும்.
   5) அது நாடகப் பாத்திரங்களின் கவர்ச்சி நிலையைக் காட்டும். ( )

34. நாடகத்தில் வேடப்புனைவு என்பது அவசியமாவதற்கான காரணம் அது.
   1) பார்ப்போர் கவனத்தை ஈர்ப்பது.
   2) பார்ப்போருக்கும் நடிப்போருக்கும் பாத்திரத்தின் இயல்பையும் உணர்வையும் ஏற்படுத்துவது.
   3) நாடகத்தின் ஆற்றுகைப் பணியை உணர்த்துவது.
   4) நடிகரை அலங்காரமாகக் காட்டுவது.
   5) வெளிப்புறத் தோற்றத்தில் கவர்ச்சியாக காட்டுவது. ( )


35. நாடகத்தில் ஒரு நடிகர் நடிக்கும் போது அரங்கில் உள்ள மற்றைய நடிகர்.
   1) உடல் அசைவுகளில் வேண்டிய பதிற்குறிகளைக் காட்ட வேண்டும்.
   2) நினைவூட்டுனரைக் கவனிக்க வேண்டும்.
   3) குறுக்கே பேசாது அமைதியாக நிற்றல் வேண்டும்.
   4) நெறியாளரை அவதானித்தல் வேண்டும்.
   5) நாடகம் பார்ப்போரை அவதானிக்க வேண்டும். ( )


❖ **36 – 40 வரையான வினாக்களிற்கு கீழ்வரும் படங்களை அடிப்படையாகக் கொண்டு விடை தருக.**

36. மேலைத்தேய அரங்க வரலாற்று ஒழுங்கில் அரங்க கட்டமைப்பு அடங்கிய எழுத்துக்கள் கூட்டம் எது.


**A**


**B**




**C**


**D**

1) A, B, C, D    2) A, B, C, D    3) D, A, B, C
4) A, B, C, D    5) D, A, B, C ( )

37.



மேற்குறித்த நாடக ஆசிரியர்கள் முறையே
1) நோர்வே, ஜேர்மன், பிரேசில், ரஷ்யா    2) நோர்வே, ரஷ்யா, ஜேர்மன், பிரேசில்
3) ரஷ்யா, ஜேர்மன், நோர்வே, பிரேசில்    4) ரஷ்யா, நோர்வே, ஜேர்மன், பிரேசில்
5) பிரேசில், ஜேர்மன், ரஷ்யா, நோர்வே ( )


38. படத்திலுள்ள வேடமுகங்கள்.




1) ஒபேறா
2) புன்றகு
3) கபுக்கி
4) நோ
5) கியோஜென்

( )

39. விதிக்கப்பட்ட நாடக பாடங்களில் கோடை, கிங்லியர், சாகுந்தல நாடக ஆசிரியர்களைக் குறித்து எழுத்து ஒழுங்கு முறை.


A


B


C


D



E

1) A, B, C
2) B, C, D
3) C, D, E
4) C, D, B
5) A, D, B

( )

agaram.lk

40. படத்தில் காடடப்பட்டுள்ள அரங்கம் எந்த நாட்டிற்குரியது.



1) இத்தாலி
2) உரோம்.
3) இந்தியா
4) சீனா
5) யப்பான்

( )

(1 x 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து, நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி A

*01.*

1) ‘ஒரு பாவையின் வீடு’ நாடகத்தின் பிரதான கரு யாது? (3 புள்ளிகள்)

2) நோறா, கிறிஸ்ரீனா ஆகிய பாத்திரங்களின் இயல்புகளை விளக்குக. (6 புள்ளிகள்)

3) “இப்சனின் நாடகத்தில் காட்சிப் பொருளும் கதை சொல்லும்” எனும் கூற்றின் பொருத்தப் பாட்டை ஒரு பாவை வீடு நாடக பாடத்தை ஆதாரமாகக் கொண்டு விபரிக்கு. (6 புள்ளிகள்)

*02.* காளிதாசர் எழுதிய நாடகங்களுள்ளே சிறந்த நாடகமாக அபிக்ஞான காகு தலத்தைக் குறிப்பிடுவர்.

1) இந்நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்கள் யாவை? (3 புள்ளிகள்)

2) ஒவ்வொரு பாத்திரங்களினதும் இயல்புகளைச் சித்தரிக்குக. (5 புள்ளிகள்)

3) சமஸ்கிருத நாடகங்களின் பொதுவான பண்புகளுடன் இந்நாடகம் ஒத்துப்போவதே உதாரணங்களுடன் விளக்குக. (7 புள்ளிகள்)

*03.* சிறந்த அவலச்சுவை நாடகங்களில் ஈடியஸ் தலைசிறந்த அவலச்சுவை நாடகமாகும்.

1) கிரேக்கத்தின் அவலச்சுவை ஆசிரியர்களின் பெயரை மூப்பின் அடிப்படையில் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

2) அவர்கள் ஒவ்வொருவரும் அவலச்சுவையின் வளர்ச்சிக்கு ஏற்படுத்திய பங்களிப்பை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

3) ஈடிபஸ் நாடகத்தில் விதி பெறும் இடத்தினைச் சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

## பிரிவு B

*04.* ஈழத் தமிழரிடையே காணப்புடும் கூத்துக்கள் பிரதேச நிலைப்பட்டது என்பர்.

1) அப்பிரதேசங்களை பட்டியற்படுத்துக. (3 புள்ளிகள்)

2) அவற்றிற் கிடையிலான ஒற்றுமைப் பண்பை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

3) இப்பிரதேசக்கூத்து வடிவங்களின் இன்றைய நிலையை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளிகள்)

*05.* 1) தமிழ் நாட்டு அரங்க வளர்ச்சியை எத்தனை காலகட்டங்களாக வகுக்கலாம்? (3 புள்ளிகள்)

2) அவ்வாறு வகுப்பதற்கான காரணம் யாது? (6 புள்ளிகள்)

3) இக்கால கட்டம் ஒவ்வொன்றினதும் மிகப் பிரதான பண்பைச் சுருக்கமாகக் கூறுக. (6 புள்ளிகள்)

*06.* பின்வருவனவற்றுள் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

1) அர்ச்சுணன் தபசு
2) சொக்கரி
3) உடக்குப்பாஸ்
4) ரட்டயகும
5) பாண்டவர் வனவாசம்

agaram.lk